## தலைப்பு 423 – ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

---

**1.** நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மருந்து உற்பத்தி, வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்ததாக,

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் இயந்திரம், உபகரணங்கள் மற்றும் பொறிகளை சுவீகரித்துக் கொள்ளும் செலவின விடயத்தின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை சுவீகரிக்கும் செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 6,000,000 பெறுமதியான நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவினக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கமைய அச்செலவின விடயங்கள் இரண்டினதும் மொத்த தேறிய நிதிஏற்பாடு அதற்கு சமமான அளவினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படுமென்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவின விடயங்களுக்கு இடையிலான மாற்றல்கள் சரியாக சீராக்கப்பட வேண்டியமை. |

1.6.2 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏசீஏ-5(ஐ) மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி மற்றும் ஏசீஏ-5(பீ) மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கக் கணக்கின் அத்திகதியில் உள்ளபடியான மீதியான ரூபா 7,570,493 தொகை, அத்திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் முறையே நிதிச் சொத்துக்கள் மற்றும் வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அனைத்து கணக்குகள் மற்றும் அதற்குரிய மாதிரிகளை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (ஆ) | கடந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 366,214,778 ஆன போதிலும் மீளாய்வாண்டிற்காக SA 82 மாதிரியின் பிரகாரம் திறைசேரியினால் தயாரிக்கப்பட்டிருந்த திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் சொத்துக் கணக்குகளின் மீதிகளில் அத்திகதியில் உள்ளபடியான கூட்டுத்தொகை ரூபா 1,103,136,134 ஆனமையால் வேறுபாடு ரூபா 736,921,356 ஆகும். வேறுபாட்டிற்காக காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | சிகாஸ் வலைத்தளத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த கணனி அச்சீடுகள் தவறானவை என்பதால் திறைசேரியுடன் கலந்துரையாடி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அனைத்து கணக்குகள் மற்றும் அதற்குரிய மாதிரிகளை திறைசேரியினால் தயாரிக்கப்பட்ட கணனி அச்சீடுகளுடன் ஒப்பிட இயலுமான வகையில் திருத்தி தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | ஏசீஏ - 2(ii) மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த செலவின கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் நிதியல்லாத சொத்துக்களை சுவீகரித்தல் ரூபா 400,565,715 ஆன போதிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் அது ரூபா 224,237,210 மற்றும் SA 82 மாதிரியின் பிரகாரம் திறைசேரியினால் தயாரிக்கப்பட்டிருந்த திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்கின் பிரகாரம் அது ரூபா 305,597,324 ஆனமையால் வேறுபாடானது முறையே ரூபா 176,328,505 மற்றும் ரூபா 94,968,391 ஆகும். வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்று தொடர்பான அத்திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களும் மீதி ரூபா 1,413,095,004 கூட்டுத்தொகையான போதிலும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அம்மீதி ரூபா 597,059,434 ஆனமையால் அந்த வேறுபாடு ரூபா 816,035,570 ஆகும். வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | சிகாஸ் வலைத்தளத்தில் நிலவிய குறைபாடு காரணமாக திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த கணனி அச்சீடுகள் தவறானவை என்பதால் திறைசேரியுடன் கலந்துரையாடி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதியல்லாத சொத்துக்களை சரியாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்க வேண்டியமை. |

1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 101,591,597,255 ஆன போதிலும் அப்பெறுமதி ரூபா 102,091,597,255 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த துடன் வேறுபாடு ரூபா 500,000,000 ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருந்த கட்டுநிதிகளின் சரியான பெறுமதி ரூபா 20,822,072 ஆன போதிலும் அது ரூபா 43,154 ஆக காசுப் பாய்ச்சல் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக காசுமீதி ரூபா 23,364,372 ஆன போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்த ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 2,542,300 ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்கவில்லை என்பதுடன் மீளாய்வாண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 102,091,597,255 ஆக உள்ளமை மற்றும் அதன் வேறுபாடான ரூபா 500,000,000 திறைசேரியினால் நேரடியாக இலங்கை ஔடதங்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கட்டுநிதி என்பது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,852,375 ஆன மூலதன சொத்துக்களின் சுவீகரிப்புக்கள் காசுப் பாய்ச்சல் கூற்றினுள் முதலீட்டு நடவடிக்கைகளினுள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழும் மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்த ரூபா 11,275,826 ஆன செயற்பாட்டு செலவினங்கள் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றமை மற்றும் எதிர்வரும் வருடத்திற்காக சரியாக கணக்குகள் தயாரிக்கப்படும் என்பது. | - மேற்படி - |

1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

இராஜாங்க அமைச்சினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன் சில ஆவணங்கள் முறைப்படி மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது பயன்படுத்தப்படும் ITMIS மற்றும் CIGAS கட்டமைப்பின் மூலம் பொறுப்புக்களை உள்ளீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றமை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம் பிணை வைப்பு பதிவேடொன்றினை மருத்துவ வழங்கல் பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்றமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்காக பிணை வைப்பு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 1645(அ) பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்தை சரியாகவும் நாளதுவரையாகவும் பேண நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொது 267 படிவத்தின் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் அனைத்து வாகனங்களுக் காகவும் பேணப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடொன்றினை சரியான மாதிரிக்கமைய பேணியிருக்கவில்லை. | வாகன நிரற்படுத்தல் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேட்டினை உரிய மாதிரிக்கமைய பேண வேண்டியமை. |

1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப் பொன்றினை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அக்கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச்செல்ல உரிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான வெளியீடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் இராஜாங்க அமைச்சின் அரச தலைவர்களின் மாதாந்த கூட்டங்களில் உள்ளக நிர்வாக கட்டமைப்பு தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய மாற்றங்களை மேற்கொண்டிருந்த போதிலும் அது தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கு முடியாதிருந்தமையால் எதிர்காலத்தில் அது தொடர்பில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவசியமானவாறு திட்டவட்டமான காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2022 யூன் 20 ஆந் திகதி வரையிலும் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 91,256,026,598 ஆன 25 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பதில்களை உரிய காலப்பகுதியினுள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம், திருத்தமான மற்றும் நடைமுறைக்கு பொருத்தமான வகையில் மதிப்பீடுகளை தயாரித்திருக்காததுடன், பின்வரும் அவதானிப்புகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 மூலதன செலவின விடயம் மற்றும் 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 18,000,000 மற்றும் ரூபா 9,648,000,000 ஆன நிதியேற்பாட்டில் முறையே ரூபா 6,000,000 மற்றும் ரூபா 2,671,582,000 அல்லது 23 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக சில செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு விஞ்சியிருந்ததுடன் நிதியேற்பாடு எஞ்சியிருந்த செலவின விடயங்களிலிருந்து நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு நிதியேற்பாடு மாற்றப்பட்டதுடன் ஒவ்வொரு செலவின விடயங்களுக்கான தெளிவுபடுத்தல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சரியானதும் நடைமுறைக்கு சாத்திமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் ஊடாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 01 மீண்டெழும் செலவின விடயங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூபா 74,150,000,000 மற்றும் ரூபா 1,600,000,000 மற்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடு ரூபா 15,070,000,000 எனுமாறு குறைநிரப்பு மதிப்பீட்டின் ஊடாக மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதுடன் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அவசியமான தடுப்பூசிகள் மற்றும் ஏனைய மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமை. | - மேற்படி - |
| (இ) | 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,700,000 தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் 100 சதவீதமும் மேலும் 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 19,300,000 மற்றும் ரூபா 562,000,000 ஆன தேறிய நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 6,419,282 மற்றும் ரூபா 124,933,527 | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றமை மற்றும் நிதியேற்பாடு விஞ்சியமைக்கான காரணங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை. | - மேற்படி - |

அல்லது 33 முதல் 22 சதவீதம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதியேற்பாட்டினை விஞ்சி எந்தவித செலவினம் அல்லது கடப்பாடு ஏற்படுத்தக்கூடாத போதிலும் 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 04 வழங்கல் மற்றும் சேவை செலவின விடயம் அல்லாத மீண்டெழும் செலவின விடயங்களின் நிதியேற்பாட்டின் சேமிப்பினை விஞ்சி ரூபா 95,246,005 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | இயலுமான எல்லா சந்தர்ப்பத்திலும் நிதியேற்பாட்டின் அடிப்படையில் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதுடன் சுகாதார சேவையின் தன்மைக்கமைய அத்தியவசியமான பணிகளுக்கு நிதியேற்பாட்டு எல்லையினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் நிதியேற்பாடு கிடைக்காமை ஆகியன காரணங்களாக அமைந்திருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(2) பிரகாரம் வருடாந்தம் மீண்டெழும் 03 வழங்கல் மற்றும் சேவை செலவின விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 31,513,451,330 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்வரும் வருடத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவு செய்யப்படும். | அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின தலைப்புக்களுக்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவினை இனங்காணுவதற்காக ஒவ்வொரு செலவின விடயங்களின் விடய அலகுகளினாலும் தமது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான தகவல்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையால் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் III இல் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 31,614,422,394 தொகையான பொறுப்புக்கள் திறைசேரியினால் SA 92 மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த திறந்த பொறுப்புக்கள் தொடர்பான | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்வரும் வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்க மைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூற்றில் உள்ளடக்கப்பட்டிராததுடன் அக்கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 15,826,262 தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் III இல் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) கேகாலை ஆதார மருத்துவ மனையினால் தனியார் பிரிவிற்கு கடப்பட்டுள்ள ரூபா 77,916,508 ஆன பொறுப்புக்கள் அரச கூட்டுத்தாபன நியதிச் சட்ட சபைக்கு உடைய பொறுப்பாக நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் III இல் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், எதிர்வரும் வருடத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான பிரிவின் கீழ் குறித்த பொறுப்புக்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் III சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, 1.7 மற்றும் 6.3 பிரிவுகள் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் இரண்டு மாதங்களினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 14 உத்தியோகத்தர்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 06 வருட கால எல்லையினை விஞ்சியிருந்த தீர்க்கப்படாத கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 373,310 ஆகும். | சில கடன் மீதிகள் 30 வருட காலத்திலும் விஞ்சியிருந்ததுடன் அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெறுவதற்குரிய காலத்தில் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அனைத்து கடன்கள் தொடர்பான விபரங்கள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் 4.2.5 பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரினால் பரிமாற்றப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடை தொகையிலிருந்து அறவிட | அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்பது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

நடவடிக்கை எடுக்க வேண்டும். 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வுபெற்றுச் சென்ற 16 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 1,758,540 ஆக காணப்பட்டதுடன் அக்கடனை அறவிடுவதற்கு தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மேலும் அதற்குரிய காரணமாக அமைந்த ஏனைய விடயங்கள் உள்ளனவா என்பது தொடர்பில் கணக்காய்விற்கு தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை. அக்கடன் மீதிகளுக்கிடையே ஓய்வுபெற்றுச் சென்ற 06 உத்தியோகத்தர் களிடமிருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 728,281 ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(உ)(ii) பிரகாரம் சேவையை கைவிட்டுச் சென்ற போதிலும் மீண்டும் சேவையில் நிறுவப்பட்டிராத உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பித்து பதிவு தொடர்பான விபரத்தை கோரி பிரதேச செயலாளரின் ஊடாக அவ் உத்தியோகத்தரின் சொத்துக்களை உறுதிப்படுத்திய பின்னர் சட்டமா அதிபரின் ஊடாக கடன் தொகையை அறவிட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கைவிட்டுச் சென்ற 28 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 1,499,023 தொகை அவ்வாறு அறவிடப்பட்டிராததுடன் அவற்றுள் 70 சதவீதம் அல்லது ரூபா 1,109,560 தொகையானது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமான பழைமையான கடன் மீதிகள் ஆகும். | - மேற்படி - | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2.4 பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 06 வருட காலப்பகுதியினுள் மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 2,779,325,736 கிரயமான மருந்துப் பொருட்கள் மற்றும் 96 மருத்துவ உபகரண உருப்படிகள் தரமிழந்திருந்தன. எவ்வாறான போதிலும் குறித்த வழங்குனரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு உரிய நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிராததுடன் அவ்வாறு அறவிடக் கூடிய தொகையில் கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்த வழங்குனருக்கு செலுத்த வேண்டிய வரவு தாள்களின் பெறுமதி காணப்படின் மாத்திரம் அறவிட வேண்டிய பெறுமதி கழிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, | | |
| (i) தரமிழந்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பதிலாக இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் 2,490,654,288 தொகையில் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 109,679,357 தொகை ஆகியவற்றிலிருந்து முறையே ரூபா 1,745,495,043 மற்றும் ரூபா 16,336,218 மாத்திரம் அக்கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. | இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 526,257,295 தொகைக்கு மேலதிகமாக ரூபா 218,901,950 இதுவரையிலும் அக்கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியதாக இருந்த வரவு கட்டளைகளிலிருந்து அறவிட வேண்டியுள்ளமை மற்றும் அறவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா 745,159,245 என்பது. | வழங்குனர்களிட மிருந்து பணத்தை அறவிடுவதற்கு உரிய நடைமுறையொன்று பின்பற்ற வேண்டியதுடன் அறவிடப்பட வேண்டிய பணத்தை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,786,480 தொகை 2022 ஆம் ஆண்டின் கட்டளையொன்றின் ஊடாக தீர்ப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,786,480 தொகைக்காக மருந்து பொருட்களை மீண்டும் இலவசமாக விநியோகிப்பதற்கு இணங்கியுள்ளமை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | உள்நாட்டு வழங்குனர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 106,083,436 தொகையை அறவிடுவதற்கு 04 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது ஏனைய நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு வழங்கல் விநியோகஸ்தர்களுக்கு இரு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பதில் கிடைக்காத காரணத்தினால் மீண்டும் அறவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வழங்குனரிட மிருந்து பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,769,733 தொகை அந்த நிறுவனங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் எஞ்சிய கொடுப்பனவுகளிலிருந்து அறவிடுவதற்கு சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்திற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் குறித்த வழங்குனருக்கு எஞ்சிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பது. | திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்று உரிய அறவீடுகளை மேற்கொண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 170(3) பிரகாரம் பொருட்களை அல்லது உபகரணங்களை உரிய முறையில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை செலவினங்களை அறவிடுதலின் கீழ் உள்ளடக்க கூடாததுடன் அவ்வாறு கிடைக்கும் பணம் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் மருத்துவ வழங்கல் பிரிவினால் ஏனைய அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் சொந்தமான மருத்துவமனைகள் மற்றும் 17 நிறுவனங்களுக்கு இலாப பங்குடன் விநியோகிக்கப்பட்டிருந்த மருத்துவ வழங்கல்களுக்கு கிடைக்கும் பணத்தை கணக்கு வைப்பதற்கு வருமானக் கணக்கொன்று பேணப்பட்டிராததுடன் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் பணம் மருத்துவ வழங்கல் செலவின விடயத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மாத்திரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அவ்வாறு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 668,924,078 ஆன வருமானங்கள் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மருத்துவ வழங்கல் செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்த செலவின விடயத்தினுள் சரியான செலவினம் வெளிப்படுத்தப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமான | இந்த குறைபாடு இனங்காணப்பட்டுள்ளதுடன் மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களுக்காக கிடைக்கும் வருமானத்தை செலவு வைப்பதற்காக கணக்கு தலைப்பொன்றினை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | மருத்துவ வழங்கல்கள் வெளிவாரி நிறுவனங்களுக்கு விநியோகிப்பதன் மூலம் கிடைக்கும் பணம் மற்றும் ஏனைய வருமான செலவின விடயத்திற்கு செலவு வைக்கப்படாத வருமானத்தை கணக்கொன்றிற்கு செலவு வைக்க வேண்டியதுடன் பணத்தை அறவிடுவதற்கு உரிய நடைமுறையொன்று பின்பற்றப்பட்டு அறவிடப்பட வேண்டிய பணத்தை கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவமனைகள் மற்றும் 17 நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த மருத்துவ வழங்கல்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 4,313,096,301 தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சுகாதார அமைச்சினால் இலங்கை ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நோயாளர்களின் அறுவைச் சிகிட்சைக்கு செலுத்த வேண்டிய பணம் அந்த மருத்துவமனைக்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரையிலும் விநியோகிக்கப்பட்ட மருத்துவ வழங்கல்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 732,507,049 தொகைக்கு உரிய அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடின்றி ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் பெறுமதியும் சரியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த மருத்துவமனையால் வழங்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழின் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தொடர்ந்தம் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 323,950,148 ஆகும். வேறுபாடான ரூபா 408,556,901 இற்கான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை. | ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு பணத்திற்காக மருந்துப் பொருட்களை வழங்குவதற்கோ இறுதி அறுவை சிகிட்சைகளுக்கான செலவினத்தை சுகாதார அமைச்சின் மூலம் வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டு நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ள துடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனை மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு ஆகியவற்றுக்கிடையே கணக்குகளை ஒப்பிட்டு மீதிகளுக்கிடையேயான வேறுபாடு இனங்காணப்பட்டவாறு உள்ளமை மற்றும் மருத்துகளை வழங்குதல் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி மாதாந்த கணனி அறிக்கைகள் (Computer System Report) ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | இவ்வாறு ஈடுசெய்வதற்காக திறைசேரியிலிருந்து உரிய அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுக்கல் வாங்கல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

அவதானிப்புக்கள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 395(ஏ) | பணத்தை வங்கியில் வைப்பிலிடல், காசோலை வரைதல் அல்லது காசு புத்தகத்தை பேணுதல் ஆகியவற்றுடன் தொடர்பற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் காசுப் புத்தகத்தை பேணும் உத்தியோகத்தரினால் வங்கி இணக்கக் கூற்றும் தயாரிக்கப்படுகின்ற மையால் அது தொடர்பில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று காணப்படவில்லை. | கணக்குப் பிரிவின் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமையால் தற்போதுள்ள உத்தியோகத்தரினால் பிரதான கணக்காளரின் கண்காணிப்பின் கீழ் கடமை மேவுகை இடம்பெறுகின்றமை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய உள்ளக கட்டுப்பா டொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 880 மற்றும் 2022 மார்ச் 16 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | இராஜாங்க அமைச்சு மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் பிணை வைத்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படா மையால் பிணை பணம் உரிய முறையில் அறவிடப்படுகின்றமை | மருத்துவ வழங்கல் பிரிவின் பிணை வைக்கும் உத்தியோகத்தரின் பெயர் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கோரிக்கை | நிதிப்பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். பிணை வைத்துள்ள உத்தியோகத்தர் கள் தொடர்பிலான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பிலும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்களின் மீள் செலுத்துதல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கடிதங்களுக்கமைய நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு கடவுப் புத்தகங்களை வழங்கிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ------------------------------- | | | |
| (i) | 9.1(ஆ) பந்தி | ஏதேனும் விசேட பணியொன்றிற்காக பதவி நிலை உத்தியோகத்தர் களுக்கு மாத்திரம் செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் பட்டியல் மீளாய்வுக் குழுவின் பங்களிப்பு படிகள் மற்றும் உபசரணை பணிகளுக்காக பதவிநிலை தரமற்ற உத்தியோகத்தர் களுக்கு 39 சந்தர்ப்பங்களில் ரூபா 1,499,000 ஆன செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் வருடங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயல்நிமித்த உபகட்டுநிதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 11.1 ஆம் பந்தி | மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2022 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 மே 25 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்காக பதிவேடுகளை நாளதுவரையாக்கி பௌதீக இருப்பு பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டுக்கான இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் உரிய முறையில் நிதி அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செலவின அங்கீகரிப்பும் அதிகாரம் இல்லாதிருந்த மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரினால் 2021 மார்ச் மாதத்தில் மாத்திரம் ரூபா 510,264,040 கூட்டுத்தொகையான 61 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | 2021 சனவரி 27 ஆந் திகதி அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட அதிகார கையளிப்பு கடிதமானது தவறுதலாக மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரின் பதவி பதிவு செய்யப்பட்டிராமை மற்றும் 2022 சனவரி 28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை. | நிதி அதிகாரங்களை உரிய முறையில் கையளிப்பதற்கும் அறிக்கையிடு வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டுக்காக இராஜாங்க அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மருத்துவ வழங்கல் பிரிவிற்காக மாத்திரம் அப்பிரிவினால் மீளாய்வாண்டிற்காக 2021 பெப்ரவரி 25 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் உள்ள பதவியணி தொடர்பான விபரங்கள், அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், செயற்படுத்தப்பட்ட காலச்சட்டகம் மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்த்த அடைவுகள் அல்லது பெறுபேறுகள், வருடாந்த செயல்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், திட்டமிடப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான | 2021 ஆம் ஆண்டினுள் Covid-19 பரவல் காரணமாக கடமைகளுக்கு வருகை தருவதில் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை, பெரும்பாலான செயற்பாடுகள் கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மையால் அவற்றை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டிராமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதும் எதிர்வரும் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்த பின்னர் தேவையேற்படின் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வருடாந்த பெறுகைகள் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அந்த பிரிவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாடானது ரூபா 475 மில்லியன் மாத்திரமாக ஆன போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 8,559.30 மில்லியன் ஆன 58 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்டிருந்த 58 செயற்பாடுகளில் 100 சதவீத செயல்முன்னேற்றத்தை பெற்றிருந்த செயற்பாடுகளின் எண்ணிக்கை 02 மாத்திரம் ஆனதுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 56 சதவீதம் மற்றும் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 4,786.4 மில்லியனான 36 செயற்பாடுகள் தொடர்பில் நிதி அல்லது பௌதீக செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

3.2 தொழிற்பாட்டு நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 திசெம்பர் 13 ஆந் திகதிய அமைப/12/1602/509/005/-11 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கமைய புதிய மருத்துவ வழங்கல்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் பொருத்தமற்ற மருத்துவ வழங்கல்களை அகற்றும் பணிகள் தொடர்பிலான தீர்மானம் எடுப்பதற்கான பட்டியல் மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக்குழுவின் பரிந்துரையின்றி எந்த மருத்துவ வழங்கல்களும் இலங்கையில் அரச மருத்துவமனைகளில் பயன்படுத்துவதற்கு கொள்வனவு செய்யப்படக் கூடாது. எவ்வாறான போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காலச்சட்டகத்திற்கு இணங்க 2020/2021 ஆம் ஆண்டிற்கான பட்டியல் மீளாய்வுக் குழு 2020 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2022 யூன் 20 ஆந் திகதி வரையில் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி இலக்குகளை அடைந்து கொள்ளல் 71 சதவீதம் மற்றும் பௌதீக இலக்குகளை அடைந்து கொள்ளல் 58 சதவீதம் மாத்திரம் ஆகும். 2020/2021 ஆம் ஆண்டிற்காக பட்டியல் மீளாய்வுக் குழு அறிக்கை 2022 | 2020 மார்ச் 20 ஆந் திகதி முதல் மே மாதம் வரையிலும் COVID தொற்று நோய் நிலைமை காரணமாக சுகாதார செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 யூலை 17 ஆந் திகதி முதலாவது குழுக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் 14 கூட்டங்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் 52 கூட்டங்கள் நடாத்தப்பட்டமை, இதுவரையிலும் இறுதி பட்டியல் மீளாய்வுக் குழு அறிக்கை குழுவின் அங்கத்தவர்களைக் கொண்டு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை, சுகாதார செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் 2022 யூன் 30 ஆந் திகதியளவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கத்தவர்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள், மின்னஞ்சல் மற்றும் கைத்தொலைபேசி குறுஞ்செய்திகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை மற்றும் | அமைச்சரவையின் தீர்மானம் மற்றும் அரச கணக்குகள் குழுவின் கட்டளைகளுக் கமைய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் காலச் சட்டத்திற்கமைய பட்டியல் மீளாய்வுக் குழுவை நடாத்தி நிதி மற்றும் பௌதீக இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குழு நடாத்தப்படும் தினங்களை திட்டவட்டமாக தீர்மானித்து முன்கூட்டியே அழைப்புக் கடிதங்களை அனுப்பி வைக்க வேண்டும். 1822/1 ஆம் இலக்க |

| | | | |
|---|---|---|---|
| | யூன் 20 ஆந் திகதி வரையிலும் வெளியிடப்பட்டிருக்க வில்லை. இந்தக் குழுவின் அங்கத்தவர்கள் சுழற்சியாக பங்களிப்பு செய்ய வைக்கும் வகையில் மீளாய்வுக் குழுவை நடாத்தும் திகதிகளை முன்கூட்டியே அவர்களுக்கு அறிவித்திராததுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி குழுவின் அங்கத்தவர்களுக்கும் ஏனைய உதவி உத்தியோகத்தர்களுக்கும் அக்குழுக்களின் பங்களிப்பிற்காக பங்களிப்பு படிகள் மற்றும் உபசரணை படிகள் உள்ளடங்கலாக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,150,00 செலவிடப்பட்டிருந்தது. | 1822/1 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து கொடுப்பனவுகளும் இடம்பெற்றுள்ளமை. | சுற்றறிக்கை திறைசேரி சுற்றறிக்கை ஒன்றல்ல என்பதால் அதனை சுகாதார செயலாளரினால் வெளியிடப் பட்டிருந்த உள்ளக சுற்றறிக்கை என்பதனாலும் முறையான திறைசேரியின் அங்கீகாரமின்றி படிகளை செலுத்தாதிருக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பினுள் 21,678 மருத்துவ வழங்கல் உருப்படிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. கோரப்பட்ட அளவு மாற்றமடைந்தமை, அவசர கட்டளைகள் உருவானமை, உள்ளடக்க பொதிகள் மாற்றமடைந்தமை, வில்லைகளுக்கு பதிலாக மாத்திரைகள் விநியோகிக்கப்பட்டமை, குழுவின் அங்கீகாரமில்லாது சில உருப்படிகளை மூலப்பொருட்களாக பயன்படுத்தியமை மற்றும் வழங்குனர்களின் அமைப்புக் குறிப்பீடுகள் மாற்றமடைந்தமை போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களின் அடிப்படையில் பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமின்றி மருத்துவ வழங்கல் உருப்படிகள் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமில்லாது 557 மருந்து உருப்படிகளும், 5,557 அறுவைச் சிகிட்சை உருப்படிகளும், 2,144 இரசாயன ஆய்வுகூட உருப்படிகளும் எனுமாறு 8,258 மொத்த மருத்துவ வழங்கல் உருப்படிகள் கணனிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அது கணனி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த மொத்த மருத்துவ வழங்கல் உருப்படிகளின் 38 சதவீதமாகும். | 8,258 மருத்துவ வழங்கல் உருப்படிகள் பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமின்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையை குறிப்பிடுதல் சரியானது என்பதுடன் பட்டியல் மீளாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் மருத்துவ வழங்கலும், கோரப்பட்ட அளவு மாற்றமடைதல், வில்லைகளுக்கு பதிலாக மாத்திரைகள் விநியோகிக்கப்படல், உள்ளடக்க பொதி மாற்றமடைதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மருந்து பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்ற போதிலும் கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கு புதிய SR இலக்கமொன்று வழங்கப்பட வேண்டியமை மற்றும் அந்த மருத்துவ வழங்கல்களுக்காக பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரம் காணப்படுகின்றமை. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021 ஆம் ஆண்டிற்காக பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமின்றி ரூபா 67,520 மில்லியன் கிரயமான 104 மருத்துவ வழங்கல் உருப்படிகள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் 22 மருத்துவ உருப்படிகளுக்காக ரூபா 52,922 மில்லியனும், 50 மருத்துவ உருப்படிகளுக்காக ரூபா 2,924 | பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமின்றி உருப்படிகளுக்காக மீள் கட்டளை இடப்பட கூடாது என இருப்புக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு கட்டமைப்பின் நுழைவு தடுக்கப்பட்டுள்ளமை. | பட்டியல் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரமுடைய மருத்துவ வழங்கல்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனும், 32 இரசாயன ஆய்வுகூட உருப்படிகளுக்காக ரூபா 5,109 மில்லியனுமாக 2022 மார்ச் 10 ஆந் திகதியளவில் ரூபா 60,955.6 மில்லியன் கூட்டுப்பெறுமதி வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஈ) | 25 பாகை செல்சியஸ் உடைய குறைவான வெப்பநிலையை வைத்திருக்கக்கூடிய ரூபா 120.29 மில்லியன் கிரயமான 05 மருத்துவ உருப்படிகள் 30 பாகை செல்சியஸ் ஐ விட அதிக வெப்பமுடைய களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாகவும், அந்த மருந்துப் பொருட்களிடையே ஒவ்வாமைகள், நீரிழிவு நோய் ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் காணப்பட்டதாக 2022 மார்ச் 28 ஆந் திகதிய மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. | இதுவரையிலும் வெப்பநிலையை கட்டுப்படுத்தக் கூடிய 28,000 சதுரஅடிகள் பரப்பளவான களஞ்சியசாலையொன்று வேயாங்கொடை பிரதேசத்திலும் 49,000 சதுரஅடி பரப்பளவான களஞ்சியமொன்றும் சாவஸ்திபுரவிலும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை, அதற்கு மேலதிகமாக மருந்துப் பொருட்களின் களஞ்சிய வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டினுள் ரூபா 65.37 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 233.34 மில்லியன் செலவிடப்பட்டு 81 நிறுவனங்களின் பிராந்திய களஞ்சிய வசதிகளை மேம்படுத்தியுள்ளமை மற்றும் அதற்கமைய எதிர்காலத்தில் இச்சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்கு உத்தேசித்துள்ளமை. | மருத்துவ வழங்கல்கள் உரிய தரத்துடன் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 119.3 மில்லியன் ஒப்பந்த பெறுமதியுடைய மத்திய வளிச்சீராக்கி கட்டமைப்பினை பொருத்துதல் மற்றும் பழுதுபார்க்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 மார்ச் 28 ஆந் திகதியளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. எனினும் தொழில்நுட்ப மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக இக்கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போதும் களஞ்சியத்தினுள் உரிய வெப்பநிலையை பேணாமையால் மருந்துப் பொருட்களின் தரம் தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது. மருந்துப் பொருட்கள், அறுவைச் சிகிட்சை உபகரணங்கள் மற்றும் இரசாயன உபகரணங்கள் ஆகியவை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வளாகத்தில் தீயணைக்கும் உபகரணங்கள் 2018 ஆம் | மருத்துவ வழங்கல் பிரிவில் நவீன தொழில்நுட்பத்துடனான மத்தியப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கல் கட்டமைப்பினை நிர்மாணிக்கும் பணிகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக குறித்த மதியுரை பணிகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மதியுரை சேவைகள் கோரப்பட்டுள்ளமை, அப்பரிந்துரைகளுக்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளமை மற்றும் பிரதான களஞ்சியத்தில் தீயணைப்பு உபகரணங்களை பொருத்துவதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தமானது 2022 மே 30 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளமை. | குறித்த ஒப்பந்த பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கும் தீயணைப்பு உபகரணங்களை உரிய திகதிகளில் சேவைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் காலாவதியாகியிருந்த போதிலும் 2022 யூன் 28 ஆந் திகதி வரையிலும் அவை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | பெறுகை நடைமுறையில் தாமதம் காரணமாக உருவாகும் மருத்துவ வழங்கல்களின் பற்றாக்குறையினை தவிர்ப்பதற்காக உள்நாட்டுச் சந்தையின் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்தமையால் 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 10 வருட காலப்பகுதியில் ரூபா 5,166 மில்லியனான மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்துள்ளதாக மருத்துவ வழங்கல் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ள போதிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்காணுவதற்கோ அவர்களிடமிருந்து அறவிடுவதற்கோ எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 04 வருட காலப்பகுதியினுள் ரூபா 575 மில்லியனான மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வழங்குனர்கள் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினராக இனங்காணப்பட்டிருந்த ரூபா 254 மில்லியனில் ரூபா 165 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. வழங்குனர் பொறுப்புக்கூறாத கட்டளைகளை சமர்ப்பிக்கும் மற்றும் பெறுகை நடைமுறையில் குறைபாடுகள் காரணமாக மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்த ரூபா 292.7 மில்லியன் மற்றும் மேலும் ரூபா 28 மில்லியன் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்காணுவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>ஒவ்வொரு மருத்துவமனைகளாலும் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்படும் மருத்துவ வழங்கல்களுக்காக செலவிடப்படும் மேலதிக கிரயத்தினை வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடைமுறையொன்று மீளாய்வாண்டிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் வரிசை அமைச்சின் ஊடாக அரச மருத்துவமனைகளில் ரூபா 852 மில்லியனான மருத்துவ வழங்கல் வகைகள் உள்நாட்டு சந்தைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மேலதிக கிரயத்தினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2022 மே 30 ஆந் திகதியில் உள்ளபடியாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் பிரதான கட்டளைகள் தாமதமடைந்தமையால் உள்நாட்டு சந்தையில் மருந்துகளை கொள்வனவு செய்த காரணத்தினால் செலவிடப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ள மேலதிக கிரயம் தொடர்பான தகவல்கள் மற்றும் மருத்துவமனையால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளமை. | ஒவ்வொரு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவுகளினால் உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்படும் மருத்துவ வழங்கல்களுக்காக செலவிடப்படும் மேலதிக கிரயத்தினை வழங்குனரிட மிருந்து அறவிடுவதற்கான நடைமுறையொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | தரமிழந்த மருத்துவ வழங்கல்களுக்கிடையே பெரும்பாலான நுண்ணுயிர்கள் காணப்படுகின்றமை, மாத்திரைகள் உடைகின்றமை, நிறம் மாற்றமடைதல், பிரித்தானிய மருத்துவ அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்காமை (does not confirm to BP specification), நுண்ணுயிர் தாக்கம் (Microbial Contamination) போன்ற விடயங்களை இனங்கண்டிருந்ததுடன் அதன் காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு அல்லது பயன்பாட்டை இடைநிறுத்துவதற்கு நேர்ந்திருந்தது. அவ்வாறு தரமிழந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 929,701,978 பெறுமதியான 56 மருத்துவ வழங்கல்கள் இருதய நோய்கள், பார்வை குறைபாடுகள், புற்றுநோய், சிறுநீரக நோய் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | தரமிழந்த மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதை குறைப்பதற்கான அவ்வாறான குறைபாடுகள் குறைந்த சிறந்த உற்பத்திகளை பயன்படுத்துதல் தொடர்பில் சான்றுப்படுத்தப்பட்ட (GMP Certificates) உற்பத்திகளை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக, 2020 யூன் மாதத்திற்கு முன்னைய காலப்பகுதியில் மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கு முன்னர் அம்மருந்துகளின் தரத்தினை பரிசோதிக்கும் நடைமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படாத போதிலும் அதன் பின்னர் கிடைக்கும் மருந்துப் பொருள் தொகுதிகள் சிலவற்றின் மாதிரிகளை பெற்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் இரசாயன ஆய்வுகூடத்திற்கு அனுப்பி பரிசோதிக்கும் நடைமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, 07 நாட்களினுள் இந்த பரிசோதனை அறிக்கை வழங்கப்படுவதுடன் அதுவரையிலும் அந்த மருந்துகள் விநியோகிக்கப்படாமை, தரமிழந்த போதிலும் அதனை சான்றுப்படுத்துவதற்கு மீண்டும் அந்த தொகுதியிலேயே மாதிரியொன்று தேசிய ஔடதங்கள் தர இரசாயன ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை 316 மருந்து வகைகளை பரிசோதிப்பதற்காக மாத்திரம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வசதிகள் காணப்படுகின்றமையால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மூலம் கூடிய அளவிலான மருந்துகளை பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டங்கள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளமை. | தரமிழந்த மருத்துவ வழங்கல்களை பெற்றுக் கொள்வதை குறைத்துக் கொள்ளும் வகையில் இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகளை போதியளவில் அதிகரிப்பதற்கும் ஏனைய பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்களை வழங்குவதற்கு முன்னர் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய ஔடதங்கள் தரப் பாதுகாப்பு இரசாயன | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள நாரஹேன்பிட்ட விவசாய அமைச்சின் கீழ் காணப்பட்ட காணியில் வதியும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை | சுயாதீனமான அங்கீகரிக்கப்பட்ட மூன்றாவது தரப்பில் இரசாயன ஆய்வுகூடமாக கைத்தொழில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆய்வுகூடம் (National Medicines Quality Assurance Laboratory -NMQAL) மூலம் தரப்பரிசோதனை மேற்கொள்ளல் இயலுமை காணப்படவில்லை. அதன் காரணமாக மருந்துப் பொருட்களின் தரமிழந்துள்ளதாக அறிக்கையிடப்படும் சந்தர்ப்பம் அளவில் அந்த மருந்துப் பொருட்களின் பெரும்பாலான அளவு நோயாளிகளால் பயன்படுத்தப்பட்டு நிறைவடைந்து உள்ளமை பலவருடங்களாக அவதானிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அந்நிலைமையை தவிர்ப்பதற்கு மருந்துப் பொருட்களை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் தரத்தினை பரிசோதிக்கும் நடைமுறையொன்று நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் மருந்துப் பொருட்கள் துறையின் அபிவிருத்திக்காக சுயாதீனமான சான்றுப்படுத்தப்பட்ட மூன்றாவது தரப்பினரின் பரிசோதனைக் கூடமாக ரூபா 99 மில்லியன் செலவினத்தில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) நிர்மாணிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் மருந்துப் பொருட்கள் ஆய்வுகூடத்தினை இதற்காக பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு, இராஜாங்க அமைச்சு, அல்லது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அகற்றுவதற்காக நட்டஈடு செலுத்தும் தேவைப்பாடு காணப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளமை, அப்பணிகளுக்குரிய தரப்பினருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை, எனினும் இதுவரையிலும் இருதரப்பினரிடமும் இறுதித் தீர்மானம் எட்டப்படாதிருந்தமை மற்றும் செலுத்த வேண்டிய நட்டஈட்டு பணத்தை சரியாக தீர்மானித்த பின்னர் அதற்கமைய காணிகளை சுவீகரிப்பதற்காக அமைச்சரவை பத்திரமொன்று எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பது. | தொழில்நுட்ப நிறுவனத்தின் (ITI) மருந்துகள் இரசாயன கூடத்தை இதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமான என்பது தொடர்பில் ஆராய வேண்டும். |
| (ஐ) | தரமிழந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் அறிவுறுத்தும் சுற்றறிக்கை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தரமிழந்த மருந்துகளை நோயாளிகளுக்கு வழங்குவதை தடுக்கும் நோக்கில் 2020 ஆம் ஆண்டு முதல் PRONTO கணனி கட்டமைப்பின் மூலம் மருத்துவ வழங்கல்களை பயன்பாட்டிலிருந்து இடைநிறுத்தும் கட்டளை குறித்த மருத்துவமனைகள் மற்றும் நிறுவனத்திற்கு அறிவிக்கப்படுவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் PRONTO கணனி கட்டமைப்பு 1,521 எண்ணிக்கையான மொத்த மருத்துவமனைக் கட்டமைப்பில் 1,381 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டிராமை, கட்டமைப்பு பிரதேச பிராந்திய மருத்துவ மட்டம் வரையிலும் வியாபிக்கும் செயற்திட்டம் (MSMIS Expansion Project) 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இடைநிறுத்தப்பட்டு சுவஸ்த எனும் புதிய பெயருடைய தகவல் முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை நிறுவும் பணி ரூபா 101.8 மில்லியன் | தரமிழந்த மருந்துகள் தொடர்பில் அறிவிக்கும் சுற்றறிக்கை PRONTO கணனிக் கட்டமைப்பின் மூலம் இதுவரையிலும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றமை, PRONTO கட்டமைப்பில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக சுவஸ்த எனும் பெயருடைய கட்டமைப்பினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை மற்றும் அதன் மூலம் தரமிழந்த மருந்துகள் தொடர்பில் அறிவிக்கும் சுற்றறிக்கை தாமதமின்றி மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளமை. | நோக்கங்களை அடைந்து கொள்ளும் இயலுமை தொடர்பில் ஆராயப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டிலும் அந்நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | | |
| (ஒ) | மதிப்பிடப்பட்ட உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக 11 மாத கால விநியோக காலத்துடனான கட்டளைகளை வழங்குதல் கொள்கையான போதிலும் பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம் செயற்பட்டிராத காரணத்தினால் 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அல்லது 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பெறுகை நடவடிக்கைகளுக்காக கடந்திருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவினால் இடப்பட்டிருந்த கட்டளைகளின் பெறுகை நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு 12 மாதங்கள் முதல் 27 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் கொவிட் தொற்றுநோய்க்கு அவசியமான தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும் ஒக்சிசன் உள்ளடங்கலாக ஏனைய பொருட்களை விநியோகிப்பதற்கும் முன்னுரிமை வழங்கியமையால் 2020/2021 வருடங்களில் பெறுகைகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய செயற்படுவதற்கு முடியாதிருந்தமை மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்பட நேர்ந்துள்ளமை. | கட்டளையிடல் மற்றும் கட்டளைகளின் செயல் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு முறையான வேலைத் திட்டத்தில் ஈடுபட வேண்டியதுடன் பெறுகை நடைமுறையின் தாமதத்தினை குறைத்துக் கொள்ள வேண்டும். |
| (ஓ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்தந்த ஆண்டிற்குரிய கட்டளைகளின் பட்டியல்கள் 11 மாத விநியோகக் காலத்துடன் (Lead Time) இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு Medical Supplies Management Information System - MSMIS கணனி கட்டமைப்பின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற போதிலும் கணனி கட்டமைப்பின் ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் கட்டளைகளின் எழுத்துமூல பிரதிகள் கூட்டுத்தாபனத்தினால் நிறுவனப் பிரிவிற்கு அனுப்புவதற்கு 18 நாட்களை விட அதிக காலம் கடந்திருந்ததுடன் அதன் பின்னர் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மையால் 11 மாதங்களான விநியோக கால எல்லையில் கருத்தில் கொள்ளக் கூடிய காலம் கட்டளைகளை வழங்குவதற்கும் கட்டளைகளை பெற்றுக் கொள்ளும் நடைமுறை ஆகியவற்றிற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. முக்கியமான மருந்துப் பொருட்களாக கருதப்படும் (Vital Items) 08 மருந்து உருப்படிகளுக்கும் அத்தியாவசியமான மருந்துகளுக்கு (Essential) உரிய 90 கட்டளைகளில் 41 கட்டளைகளுக்குரிய கட்டளை பட்டியல், ஆண்டின் முதல் இரு மாதங்களிலும் கணனி கட்டமைப்பின் மூலம் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டளைகளின் பட்டியலின் எழுத்துமூல | கட்டளைகளை விடுவித்த திகதியிலிருந்து எழுத்து மூல பிரதியை வழங்குவதற்காக 18 நாள் கொண்ட காலம் கடந்துள்ளமை மற்றும் உள்ளபடியாக கட்டளையிடப்பட்ட திகதியாக கருதக்கூடியது கட்டளை விடுவிக்கப்பட்ட திகதி என்பது, மருத்துவ வழங்கல் பிரிவினால் ஆண்டின் முதல் காலப்பகுதியில் எதிர்வரும் வருடத்திற்கான தேவைப்பாடு, தற்போதுள்ள இருப்பின் நிலைமை, நுகர்வு சுற்றுவட்டம் ஆகியவற்றிற்கமைய அந்த கட்டளைகளை இரத்துச் செய்தல், இடைநிறுத்தல், தாமதித்தல் இடம்பெறுகின்றமை மூலம் மேலதிக இருப்பு ஏற்படுவதை தவிர்த்துக் கொண்டு கட்டளைகள் வழங்கப்படுகின்றமை, உரிய மருத்துவ வழங்கல் உருப்படியை விநியோகிப்பதற்கு 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடக்கக்கூடும் என்பது, அது உள்ளபடியாக பெறுகைகளின் தாமதம் அல்ல என்பது மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் இருப்பு தேவைப்பாட்டின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைகின்றமை. | உள்ளபடியாக கட்டளையிடப்பட்ட திகதியாக கட்டளை விடுவிக்கப்பட்ட திகதியை கருத்தில் கொண்டு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட மையால் கணனி கட்டமைப்பின் ஊடாக குறித்த கட்டளைகள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் நிறுவனப் பிரிவிற்கு அனுப்பி வைப்பதற்கு 18 நாட்கள் முதல் 06 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. கூட்டுத்தாபனத்திற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக 34 கட்டளைகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 27 கட்டளைகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு குறித்த உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர். | | |
| (ஔ) | மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்கு பிரதானமாக தொடர்புபடும் மருத்துவ வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களிடையே சிறந்த இணைப்பு மற்றும் தொடர்பொன்று காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான தொடர்பு அல்லது இணைப்பொன்று காணப்படவில்லை என்பது பல வருடங்களாக அவதானிக்கப்பட்டதுடன் அந்நிறுவனங்களினால் கட்டளைகளுக்குரிய பணிகள் தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை அவதானிக்கப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவினால் அதற்கடுத்த வருடத்திற்காக கட்டளையிடப்படும் 13,000 மருத்துவ வழங்கல் உருப்படிகளின் செயல்முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு பல வருடங்களாக போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருந்து உற்பத்தி, விநியோகித்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் இராஜாங்க அமைச்சினை நியமித்த பின்னர் வழங்கல் முகாமைத்துவம் தொடர்பில் செயல் முன்னேற்றம் மாதாந்தம் மேற்கொள்ளப்படுவதுடன் அங்கு 03 மாதங்களுக்கு மேற்பட்ட இருப்பு மட்டங்களில் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றமை. | MSMIS கட்டமைப்பின் ஊடாக விநியோகிக்கப்படும் கட்டளைகள் தொடர்பில் மருத்துவ வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்களுக் கிடையே சிறந்த இணைப்பு மற்றும் தொடர்பு ஆகியவற்றை பேண வேண்டும். |
| (க) | மருந்துகளை கட்டளையிடுதல் தொடக்கம் இருப்பினை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வரையிலும் ஒவ்வொரு நடைமுறையும் கட்டமைப்பிற்கு உட்படுத்தி (Status) குறித்த கட்டளை தொடர்பில் செயல்முன்னேற்றத்தை நாளதுவரையாக்கும் வசதிகள் கணனி கட்டமைப்பின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தரால் கட்டளைக்குரிய தகவல்கள் 07 வருடங்களாக நிலவிய தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டமைப்பிற்கு உட்செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட | MSMIS கட்டமைப்பின் ஊடாக மருந்துப் பொருட்களின் கட்டளைகளை மருத்துவ வழங்கல் பிரிவினால் வெளியிடப்பட்ட போதிலும் பெறுகை நடவடிக்கைகளில் உரிய கொள்வனவு நிபந்தனைகளின் தகவல்களை உள்ளடக்குவதற்கு வெப் இடை அச்சகமொன்று (Web Interface) இற்கு வசதிகள் காணப்படவில்லை என்பது, இதனால் பெறுகைகள் மற்றும் மேலதிக பணிகளுக்காக இக்கட்டமைப்பினை பயன்படுத்தாமை மற்றும் அதற்கமைய எதிர்காலத்தில் புதிய | கட்டளையுடன் தொடர்புடைய செயல் முன்னேற்றத்தை நாளது வரையாக்கும் வசதிகள் கணனி கட்டமைப்பின் ஊடாக இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள மையால் அதனை பயன்படுத்தி கட்டளைகள் தொடர்பிலான |

| | | |
|---|---|---|
| கட்டளைகளுக்குரிய தகவல்கள் ஏனைய கணனி தாள்கள் (Excel) ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தமையால் குறித்த விலைக்கேள்வியின் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி, பெறுகைகள் குழு தீர்மானத்தை வழங்கிய திகதி, நாணயக் கடிதம் திறக்கப்பட்ட திகதி ஆகிய தகவல்களை துரிதமாக பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இதன் காரணமாக பெறுகையில் ஏற்பட்ட தாமதத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பதை பரிசோதிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் அதனை போன்றே கட்டளையின் தற்போதைய செயல்முன்னேற்றம் தொடர்பிலான தொழில்நுட்பத் தகவல்களை அறிந்து கொள்வதற்கும் அதிக காலம் எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | கட்டமைப்பின் மூலம் இக்குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செயல்முன்னேற்றம் நாளதுவரையாக்கப் பட வேண்டும். |

3.3 உள்நாட்டு நிதியங்களில் இருந்து செயற்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது காணப்படும் உள்நாட்டு மருந்து தேவைப்பாட்டின் 15 சதவீதம் மாத்திரம் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக 15 நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றமையால் 2025 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு உற்பத்தியை 40 சதவீதம் வரை அதிகரிக்கும் நோக்கிலும் மருந்து உற்பத்திகளுக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் ரூபா 2,460 மில்லியன் மொத்த கிரய மதிப்பீட்டுடனான அம்பாந்தோட்டை ஆரம்பொக்க தோட்டத்தின் மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்ட விசேடமான மருந்து உற்பத்தி வலயமொன்றினை தாபிப்பதற்காக 2020 நவம்பர் 17 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த முதலீட்டு வலயத்தில் 400 ஏக்கர் பரப்பளவான பிரதேசம் இரு கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கும் முதலாவது கட்டமாக 200 ஏக்கர்களினுள் மருந்து உற்பத்தி கம்பனிகள் 20 மற்றும் இரண்டாவது கட்டத்தின் கீழ் மேலும் 200 ஏக்கர்களினுள் 20 மருந்து உற்பத்தி கம்பனிகளை நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்திற்கமைய செயற்திட்ட வலயத்தின் நிர்மாணங்கள் 2021 ஆம் ஆண்டில் முதல் காலாண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது கட்டத்தில் | நுழைவாயிலை நிர்மாணித்தல் தொடர்பில் குறித்த கோரிக்கை முதலீட்டுச் சபையினால் முன்வைக்கப்படாமையால் அதற்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை என்பது, இச்செயற்திட்டம் இலங்கை முதலீட்டுச் சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமை, முதலீட்டுச் சபையின் பரிந்துரைக்கமைய வலயத்திற்குரிய மின்சார விநியோகத்தினை பெற்றுக் கொள்வதற்கு ரூபா 53.2 மில்லியன் மற்றும் நீர் விநியோகத்தினை பெற்றுக் கொள்வதற்கு ரூபா 144 மில்லியன் செலுத்தப்பட்டமை மற்றும் குறித்த பணிகள் முதலீட்டுச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தமை மற்றும் முதலீட்டுச் சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பணிகளின் செயல் முன்னேற்றம் முதலீட்டுச் சபையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பது. | முதலீட்டுச் சபையின் நிர்மாணங்களின் செயல் முன்னேற்றத்தை கால அடிப்படையில் ஆராய வேண்டும். |

உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்காக ரூபா 250 மில்லியனான மேலதிக நிதியேற்பாடு இராஜாங்க அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 250 மில்லியனான மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 197.20 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 52.80 மில்லியன் அல்லது மொத்த நிதியேற்பாட்டின் 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. வீதி இணைப்பினை பெற்றுக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் நிதியேற்பாடு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிராமையால் அது எஞ்சியிருந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது. மின்சாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மின்சார் சபைக்கு ரூபா 53.20 மில்லியனும், நீர் விநியோகத்தை பெற்றுக்கொள்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலைப்புச் சபைக்கு ரூபா 144 மில்லியனும் மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கும் பணியை நிறைவேற்றுதல் தொடர்பிலும் பௌதீக பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு 2022 யூன் 20 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டினுள் முதலீட்டு சபையின் நிதியத்திலிருந்து ரூபா 360 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அப்பணிகளை நிறைவேற்றுவதிலான செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மருத்துவ வழங்கல் பிரிவினால் மதிப்பிடப்பட்ட மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்காக 11 மாத வழங்கல் காலத்துடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளை பிறப்பித்தல் கொள்கையாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும் அக்கட்டளைகளின் எண்ணிக்கையில் 90 சதவீதமான அளவு உரிய நேரத்தில் விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. பெறுகை நடைமுறைக்காக திட்டமிடப்பட்டிருந்த காலத்தை விட அதிக காலம் பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றமை மற்றும் வழங்குனரின் தாமதம் மருத்துவ வழங்கல்களின் தாமதத்திற்கு காரணமாகின்ற போதிலும் அதற்கான காரணங்களை உரிய முறையில் இனங்காணுவதற்கும் தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தாமதத்தின் காரணமாக ஒவ்வொரு ஆண்டிலும் மிகவும் பாரியளவிலான செலவினத்துடன் மருத்துவ வழங்கல்கள் உள்நாட்டு சந்தைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 852 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்கள் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வழங்கல்கள் தாமதமடையும் மருந்துகள் தொடர்பில் பகுப்பாய்வொன்று அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு விரிவான அறிக்கையொன்றினை ஒரு மாதத்தினுள் செயற்பாட்டுக் குழுவிற்கு வழங்க வேண்டுமென 2021 நவம்பர் 17 ஆந் திகதி அரச கணக்குகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் அவ்வாறான அறிக்கையொன்று கணக்குகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு வருடத்திலும் வழங்குவதற்கு நேர்கின்ற மருந்துப் பொருட்களின் எண்ணிக்கை 15,000 இற்கு மேற்படுகின்ற மற்றும் அந்த மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்படும் காலம் தொடர்பில் பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மதிப்பிடப்பட்ட மருத்துவ வழங்கல்களை விநியோகிப் பதற்காக எடுக்கும் 11 மாத காலம் விநியோக காலத்தினை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பெறுகை நடைமுறைக்கு எடுக்கும் காலம் மற்றும் தாமதத்திற்கான காரணங்களை உரிய முறையில் இனங் காணுவதற்கும் தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கு உரிய சந்தர்ப்பங்கள் குறைத்துக் கொள்ளப்பட வேண்டும். குறித்த அறிக்கை தாமதமின்றி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டின் நிலுவை மருந்துப் பொருள் பதிவேட்டில் காணப்படுகின்ற 2020/2021/2022 ஆம் ஆண்டுகளுக்கான கட்டளைகளை சமர்ப்பித்திருந்த 23 மருந்து உருப்படிகளும் இருப்பு பெறுவனவு நிகழ்ச்சித் திட்டங்களை அடிக்கடி திருத்தங்களுக்கு உள்ளாக்கியிருந்தமை, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் பெறுகைகள் குழுவினால் கட்டளைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, கட்டளைகளை இரத்துச் செய்தமை மற்றும் கொவிட் 19 நோய் பரவல் காரணமாக கேள்வி குறைவடைந்தமை போன்ற விடயங்களின் காரணமாக அந்த 23 மருந்து உருப்படிகளின் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. | கேள்வி தளம்பலடைதல், கட்டளைகள் இடைநிறுத்தப்பட்டமை, கட்டளைகள் இரத்துச் செய்யப்படல், Covid-19 தொற்றுநோய் காரணமாக கேள்வி குறைவடைதல், பெற்றுக் கொண்ட பின்னர் கட்டளை கிடைத்தல், கட்டளைகளை பெற்றுக் கொள்வதில் நிலவிய தாமதங்கள், களஞ்சிய வசதிகள், இருப்புக்களின் காலாவதியாகும் திகதிகள், இருப்பு பெறுமதிகள், ஒரே மருந்தின் பல்வேறு மாத்திரைகள் காணப்படல், பதிலீட்டு மருந்துப் பொருட்கள் காணப்படல், இருப்பு தரமிழந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இருப்பு பெறுவனவு கால அட்டவணை அடிக்கடி மாற்றப்படுவதாகவும் அவ்வாறு மாற்றப்படுவதால் அநாவசியமான வகையில் இருப்பு சேகரிக்கப்படுவதால் ஏற்படும் இருப்பு நட்டத்தினை குறைத்துக் கொள்ள முடியும் என்பது. | இருப்பு பற்றாக்குறை ஏற்படுவதை குறைத்துக் கொள்ள அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் உரிய முறையில் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்காக கட்டளையிடப்பட்டு 07 மாதங்களின் பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தமை, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக கட்டளைகளை சமர்ப்பித்திராமை, 2019 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்டிருந்த கட்டளை 21 மாத காலங்களின் பின்னர் மீண்டும் மாற்றியமைக்கப் பட்டிருந்தமை மற்றும் வருடாந்த கட்டளை உரிய முறையில் திட்டமிடப்பட்டிராமை போன்ற காரணத்தினால் 2022 ஆம் ஆண்டளவில் மிகவும் அத்தியாவசியமான (Vital) மருந்துப் பொருளான விசர்நாய் கடி நோய்க்கு உள்ளாகிய நோயாளிகளுக்கு வழங்கப்படும் Anti Rabies Serum மருந்தின் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டிற்காக கட்டளை வழங்கப்பட்டு 12 மாதங்களின் பின்னர் விசர்நாய் கடி நோய்க்கு சிகிட்சையளிப்பதற்கு அத்தியாவசியமான Anti Rabies (TC) | நிலவும் இருப்பு மட்டம் சராசரி மாதாந்த தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு இருப்பு கட்டளைகளை தற்காலிகமாக நிறுத்தியமை, இந்த பெறுகை தொடர்பில் கிடைத்த மேன்முறையீடுகள் மற்றும் அவற்றின் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முழுமையான மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் மற்றும் மேன்முறையீடுகளை விசாரணை செய்து இந்த பெறுகையினை இருப்பு விநியோகிக்கும் காலப்பகுதிக்கு முன்கூட்டியே நிறைவு செய்வதற்கு இராஜாங்க அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கு இயலுமானதாக இருந்தமை, அதுவரையிலும் நிலவிய இருப்பின் ஒரு பகுதி காலாவதியானமையால் மீண்டும் இருப்பின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் கட்டளையிலிருந்து | கட்டளைகள் தொடர்பில் பின் தொடர்தல்களை மேற்கொள்வதற்கும் திருத்தப்பட்ட கட்டளைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பு பற்றாக்குறை ஏற்படுவதை குறைத்துக் கொள்வதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தடுப்பூசியை கொள்வனவு செய்வதற்கு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினுள் இந்த உருப்படியின் இருப்பு மட்டம் ஒரு மாதத்திற்கு குறைவான காலத்திற்கு மாத்திரம் போதுமானதாக காணப்பட்டது. | தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 55,000 ஆன இருப்பொன்று மீண்டும் கட்டளையிடப்பட்டமை மற்றும் அந்த இருப்பினை உடனடியாக விநியோகிக்குமாறு அறிவித்து 30,000 ஆன இருப்பு கிடைக்காமையால் இருப்பு பற்றாக்குறையொன்று ஏற்பட்டமை. | |
| (ஈ) | 2022 ஏப்ரல் 22 ஆந் திகதியளவில் இருப்பு பூச்சியமான முக்கியமான (Vital) மருந்தொன்றான இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் Streptokinase தடுப்பூசியின் 2022 ஆம் ஆண்டிற்கான கட்டளை 2021 சனவரி மாதத்தில் இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனரிடமிருந்து விலைக் கேள்வி சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இரு தடவைகள் விலைக் கேள்வி இரத்துச் செய்யப்பட்டு மீள கோரப்பட்டிருந்தது. 2022 மார்ச் மாதம் வரையிலும் விலைக்கேள்வி மதிப்பீட்டு மட்டத்தில் காணப்பட்டமையால் இருப்பு பற்றாக்குறையொன்று உருவாகியிருந்தது. | Streptokinase எனும் மருந்தில் அதிக பக்கவிளைவுகள் காணப்படுகின்றமை மற்றும் புதிய ஆராய்ச்சிகளுக்கமைய இந்த மருந்தின் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியாமையால் அண்மைக் காலமாக புதிய மருந்தொன்றான Tenecteplase 40mg அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை இதனால் Streptokinase எனும் மருந்திற்காக காணப்படும் கேள்வி குறைவடைந்துள்ளமை, ஒரு வருடத்திற்கு தேவையான 504 உருப்படிகள் மாத்திரம் காணப்படுகின்றமையால் இதற்காக பதிவு செய்த வழங்குனர் ஒருவர் இல்லாதிருந்தமையால் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளமை. | இருப்பு பற்றாக்குறை ஒன்று ஏற்படுவதனை குறைத்துக் கொள்வதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் முறையாக எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | Streptokinase தடுப்பூசியினை பயன்படுத்தும் போது ஏற்படும் பக்கவிளைவுகள் காரணமாக அந்த மருந்திற்கு பதிலாக Tenecteplase 40mg தடுப்பூசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. Tenecteplase 40mg தடுப்பூசிக்காக கடந்த வருடத்தில் வழங்கப்பட்டிருந்த கட்டளைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய இருப்பு போதுமானது என்பதால் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் இரத்துச் செய்வதற்கு 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவு தீர்மானித்திருந்தது. எனினும் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதியளவில் மருத்துவ வழங்கல் பிரிவினுள் 02 மாதங்களை விட குறைவான காலத்திற்கு இந்த இருப்பு | புதிய மருத்துவ ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளுக்கமைய Tenecteplase 40mg தடுப்பூசி அதிக பெறுபேறுகளை தருகின்ற பொதிலும் Streptokinase தடுப்பூசியுடன் ஒப்பிடும் போது விலை மிகவும் உயர்வானது என்பதால் நாட்டில் நிலவும் நிதி இடர்பாடு காரணமாக மீண்டும் அந்த Streptokinase தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமை தொடர்பில் ஆராயப்பட்டவாறு உள்ளமை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றமையால் இருப்பு பற்றாக்குறையொன்று உருவாகியிருந்தது. | | |
| (ஊ) | கட்டளை வழங்கப்பட்டு 24 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் நாணய கடிதம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்டளைகள் மாற்றப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் மயக்கமடையச் செய்யும் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் Suxamethonium chloride தடுப்பூசி 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவினுள் 02 வாரங்களுக்கு குறைவான காலத்திற்காக மாத்திரம் இருப்பு நிலவியதுடன் மருத்துவமனையினுள் 02 மாதங்களை விட குறைவான காலத்திற்கான இருப்பே காணப்பட்டது. | வருடாந்தம் வழங்கப்படும் இருப்புக் கட்டளைகள், வெகுமதி பெறுவனவுகள், முன்னர் இடப்பட்ட கட்டளைகளின் இருப்பு பெறுவனவுகள், இருப்பு பயன்பாட்டின் தளம்பல்கள் போன்ற காரணங்களின் அடிப்படையில் தகவல் கட்டமைப்பினை தொடர்ச்சியாக ஆராய்ந்து கட்டளைகள் திருத்தப்படுகின்றமை, அவ்வாறு மேற்கொள்வதற்கு அத்தியாவசதியமான இருப்பு சேர்வதனை தடுக்கக்கூடியமை, அதன் மூலம் மருந்துப் பொருள் இருப்பின் விரயத்தினை தடுக்கக்கூடியமை மற்றும் கட்டளையிடப்பட்ட 70,000 எண்ணிக்கையான Suxamethonium chloride இருப்பு 2022 மே 03 ஆந் திகதியளவில் கிடைத்துள்ளமை. | - மேற்படி - |
| (எ) | கட்டளையிடப்பட்டு 27 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் நாணயக் கடிதம் வழங்கப்பட்டிருந்தமை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்டளைகள் நிராகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக எதுவித கட்டளையும் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிராமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அத்தியாவசியமான மருந்துப் பொருளான ஒவ்வாமைகளுக்காக பயன்படுத்தப்படும் Cetirizine HCL சிறப் மருந்து 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் இருப்பு பூச்சியமாக இருந்ததுடன் மருத்துவமனைகளில் 05 வாரங்களுக்கு போதுமான இருப்பு மாத்திரம் காணப்பட்டது. 2022 ஏப்ரல் 22 ஆந் திகதியளவில் காசல் வீதியின் மகளிர் மருத்துவமனை, குருணாகலை போதனா வைத்தியசாலை மற்றும் பதுளை பிரதான மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளின் இருப்பு மட்டம் பூச்சியமாக இருந்தது. | வருடாந்த இருப்பு கட்டளைகள், வெகுமதி பெறுவனவுகள், முன்னர் கட்டளையிடப்பட்ட இருப்பு பெறுவனவுகள், இருப்பு பயன்பாட்டின் தளம்பல்கள் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு கட்டளைகளை திருத்தியமைத்ததன் மூலம் அநாவசியமான இருப்பு சேர்வதை மற்றும் இருப்பின் விரயத்தினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை, Cetirizine HCL சிறப் மருந்து மருத்துவ வழங்கல் பிரிவினுள் பற்றாக்குறையாக காணப்படுகின்ற போதிலும் சில மருத்துவமனைகளில் போதியளவான இருப்பு காணப்படுகின்றமை, இதுவரையிலும் அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு (SPMC) சமர்ப்பிக்கப்பட்ட கட்டளை கிடைப்பதற்கு 02 மாத காலம் எடுக்கின்றமை மற்றும் இந்த மருந்துக்கு மாற்றீடாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தக் கூடிய Syrup Chlopheniramine மருந்து 03 மாதங்களுக்கு போதுமான அளவில் மருத்துவ வழங்கல் பிரிவின் காணப்படுகின்றமை மற்றும் அதன் காரணமாக இந்த மருந்து பற்றாக்குறையால் நோயாளிகளுக்கு தாக்கமொன்று எற்படாது என்பது. | |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டிற்கான கட்டளையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சரியான தீர்மானங்களை எடுக்காமை மற்றும் உரிய முறையில் திட்டமிடாத காரணத்தினால் அமைச்சரவை நிரந்தர பெறுகைக் குழுவின் மட்டத்திலிருந்து அமைச்சின் பெறுகை மட்டம் வரையும் விரிவடைந்தமை, கட்டளைகளின் அளவு அவ்வவ்போது மாற்றமடைந்தமை, அமைச்சின் விடயப் பரப்பு மாற்றமடைந்த காரணத்தினால் சுகாதார அமைச்சின் பெறுகைகள் குழுவிலிருந்து இராஜாங்க அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கு பரிமாறப்பட்டமை, மீண்டும் ஒப்பந்த பெறுமதி உயர்வடைந்தமையின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சின் பெறுகைகள் குழுவின் மட்டத்திலிருந்து அமைச்சரவையின் நிரந்தர பெறுகைகள் குழுவிற்கு மாற்றமடைந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் மருந்துப் பொருள் இருப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு அண்ணளவாக 02 வருட காலம் கடந்திருந்தமை, 2022 ஆம் ஆண்டிற்காக 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த கட்டளைகளையும் மதிப்பீட்டு மட்டத்தில் காணப்பட்ட காரணத்தினால் அத்தியாவசியமான உயிர்காக்கும் மருந்தொன்றான Meropenem 1g தடுப்பூசி 2022 ஏப்ரல் 22 ஆந் திகதியளவில் மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து மருத்துவமனைகளுக்கு ஒரு மாதத்திற்கும் குறைவான இருப்பு மாத்திரம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த தாமதம் காரணமாக ஒவ்வொன்றும் ரூபா 481 இற்கு கொள்வனவு செய்யக்கூடியதாகவிருந்த இந்த மருந்து 2021 ஆம் ஆண்டின் போது | இந்த பெறுகை அமைச்சரவை நியமித்த பெறுகைகள் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளமை, அதற்கமைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளமை, எவ்வாறான போதிலும் அந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் வெளியிடப்பட்ட பெறுகைகள் 35 மேலதிகங்களுக்கு இணங்க இந்த பெறுகை மீண்டும் அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கு அனுப்பப்பட்டமை, பின்னர் தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் அளவினை அதிகரிப்பதற்கு தீர்மானித்திருந்தமையால் மீண்டும் அங்கீகரித்த எல்லை அமைச்சரவை நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவின் மட்டம் வரையிலும் அதிகரிக்கப்பட்டமை, எவ்வாறான போதிலும் பின்னர் நாட்டில் நிலவிய நிதி நிலைமையை கருத்தில் கொண்டு இந்த அளவினை முன்னைய அளவிற்கு குறைப்பதற்கு தீர்மானித்தமை, மீண்டும் பெறுகை அமைச்சரவை பெறுகைகள் குழுவிற்கு அனுப்பப்பட்டமை மற்றும் இந்த மருந்தின் பற்றாக்குறை நிலைமையொன்று ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது பெறுகையின் முதல் 50 சசதவீதத்திற்கு முழுமையாக கொடுப்பனவு மேற்கொள்ளாமையால் ஏற்பட்ட நிலைமையே ஆகும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அரச மருத்துவமனைகளால் ஒவ்வொன்றும் ரூபா 1,956 இற்கும் ரூபா 4,697 இற்கும் இடைப்பட்ட பல்வேறு விலைகளின் கீழ் ரூபா 49.52 மில்லியன் செலவிடப்பட்டு உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | அங்கொட உப களஞ்சியசாலையின் 02 ஆம் கட்டிடத்தில் எஞ்சிய நிர்மாண ஒப்பந்தம் 2018 யூலை 18 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. 2018 நவம்பர் 11 ஆந் திகதி ரூபா 688,789 ஆன தொழில் ஆரம்பிப்பு முற்பணமொன்றினை வழங்கிய பின்னர் 2019 சனவரி 14 ஆந் திகதியளவில் 40 சதவீதமான பணி நிறைவு செய்யப்பட்டிருந்தமையின் அடிப்படையில் 2019 பெப்ரவரி 16 ஆந் திகதி ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,072,867 செலுத்தப்பட்டிருந்ததுடன் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புத் தொகை ரூபா 137,939 ஆகும். நிர்மாணங்களை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு தவறியமையின் அடிப்படையில் ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியிருந்த போதிலும் அதுவரையிலும் முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறி காலாவதியாகியிருந்தது. ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 934,971 தொகை 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கருத்து முன்வைக்கப்படும் என்பது. | உடன்படிக்கை கைச்சாத்திடு வதற்கு எடுக்காதிருப் பதற்கும் முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறி காலாவதியாவதற்கு முன்னர் உரிய நடவடிக்கை எடுக்காதிருந்த காரணத்தினால் மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களை இனங் காணுவதற்கும் நட்டத்தை அறவிடுவதற்கும் எஞ்சிய பணியினை நிறைவு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டினுள் மருத்துவ வழங்கல் பிரிவின் மொத்த கோஸ் கட்டளை 30,000,000 மீற்றர்களாக மதிப்பிடப்பட்டு 2021 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய අමප/21/1347/309/078/ටීඑආර් ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 421 வழங்குனர்களின் பட்டியலின் அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு பங்கீட்டு முறைமையின் | வழங்குனர்கள் தொடர்பில் தளப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளமை. | அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் அறுவைச் சிகிட்சை கோஸ் பங்கீட்டு நிர்ணய குழுவின் தீர்மானத்திற்கமைய வழங்குனர்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

அடிப்படையில் அல்லது வழங்குனரின் இயலளவின் அடிப்படையில் கட்டளைகளை கையளித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் அறுவைச் சிகிட்சைகளுக்குரிய கோஸ் பங்கீட்டு நிர்ணய குழுவின் பரிந்துரைக்கமைய வழங்குனர்கள் 261 பேரின் தளப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் வழங்குனர்கள் சமர்ப்பித்திருந்த பதிவேடுகளின் அடிப்படையில் மாத்திரம் மற்றும் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 82 ஆம் பிரிவின் பிரகாரம் ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதிப்பத்திரம் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து (ITI) பெற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்திகள் தொடர்பான தரஅறிக்கை இல்லாதிருந்தமை தொடர்பில் கருத்தில் கொள்ளாது கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மருந்துப் பொருட்கள் தொடர்பிலான நட்டங்கள் மற்றும் இழப்புக்களை இனங்காணல், அறிக்கையிடல் மற்றும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (i) கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தொடர்ந்தும் அறவிடுவதற்குள்ள அல்லது பதிவழிப்பதற்குள்ள நட்டங்கள் தொடர்பான சரியான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களை விட குறைந்த ரூபா 281.15 மில்லியனான 72 சம்பவங்கள், 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 91.90 மில்லியனான 140 சம்பவங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 79 மில்லியனான 73 சம்பவங்கள் காணப்பட்டன. எனினும் அந்த நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணிகளை தீர்ப்பனவு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 104(1) பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டியவர்களை திட்டவட்டமாக அறிந்து கொள்வதற்காக ஆரம்ப விசாரணை குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அண்மித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 ஆகிய குறிக்கோள்களை நெருங்குவதற்காக தமது வளங்களை ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டியிருந்தது. மேலும் சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயலாற்றல் இலக்கு 3.5 இல் உள்ளடக்கப்பட்ட அபாயகர ஔடதங்களின் முறையற்ற பாவனை மற்றும் அபாயம் ஏற்படுத்தும் வகையிலான மதுசாரங்களின் பாவனை உள்ளடங்கலான பொருட்களின் முறையற்ற பாவனையை தடுப்பதற்காக சிகிட்சை அளிப்பதனை வலுவூட்டுதல் மற்றும் இலக்கு 3.8 இல் உள்ளடக்கப்பட்ட நிதி அபாயத்திலிருந்தான பாதுகாப்பு, தரமான அத்தியாவசிய சுகாதார பாதுகாப்பு சேவைகளை அண்மிப்பதை போன்றே பாதுகாப்பான, செயற்திறனான, தரமான மற்றும் சுமக்கக் கூடிய மட்டத்திலான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை மற்றும் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குதல் போன்ற விடயங்கள் உள்ளடங்கலான அனைத்தையும் உள்ளடக்கிய சுகாதார பாதுகாப்பினை அடைந்து கொள்ளல் எனும் இரு இலக்குகள் இராஜாங்க அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் அதற்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலவிய கொவிட் நிலைமை காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்க முடியாதிருந்த போதிலும் நிதி அபாயத்திலிருந்தான பாதுகாப்பு, தரமான அத்தியாவசிய சுகாதார பாதுகாப்பு சேவைகளுக்காக சேவைகளை அடைந்து கொள்ளுதல் போன்றே பாதுகாப்பான, செயற்திறனான, தரமான மற்றும் சுமக்கக் கூடிய மட்டத்திலான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை மற்றும் அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் விடயங்கள் இராஜாங்க அமைச்சினால நிறைவேற்றப்பட்டுள்ளமை மற்றும் எதிர்காலத்தில் அதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றமை. | நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் வழங்கல் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

5 நல்லாளுகை

5.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் கீழ் பிரஜைகளினால் கோரப்படும் தகவல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | மேன்முறையீட்டு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் / சேவைபெறுநர் விஞ்ஞாபனம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தியிருக்க வில்லை. அந்த சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் கீழான இரு கூட்டுத்தாபனங்களின் விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்குரிய இணைப்புக்களை மேற்கொண்டிருக்கவில்லை. அதன்காரணமாக இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவின் கண்காணிப்பிற்கு உள்ளாகும் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்ற மதிப்பீடுகளில் அமைச்சிற்கு உரிய புள்ளிகள் இழக்கப்பட்டிருந்தது. | நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பிரஜைகள் / சேவை பெறுநர் விஞ்ஞாபனமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழான இரு கூட்டுத்தாபனங்களின் விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குரிய இணைப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் விஞ்ஞாபனத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பிரஜைகள் / சேவை பெறுநர் விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 திகதிய இலக்கம் DMA/2009(1), 2016 ஜனவரி 28 திகதிய இலக்கம் DMA/2009(1)(i) மற்றும் 2019 ஜனவரி 12 திகதிய இலக்கம் DMA/1-.2019 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி காலண்டிற்கு 01 என்ற வகையில் ஆண்டிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி மற்றும் 02 கணக்காய்வாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தமையால் 2021 ஆம் ஆண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

6. மனிதவள முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மருத்துவ வழங்கல் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 718 இல் 221 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவற்றுள் 161 பதவிகள் பல வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டமை மருத்துவ வழங்கல் நடைமுறையை முறையாகவும் செயற்திறனாகவும் நடாத்திச் செல்வதற்கு தடையாக அமைந்திருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினுள் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றில் உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 03 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 06 ஊழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவி உயர்வுக்காக நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி உத்தியோகத்தர் களை தெரிவுசெய்து நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை, விசேட தரத்திலான மருந்தாளருக்கான 02 வெற்றிடங்களில் ஒரு வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை, மேலும் 08 பதவிகளுக்காக வெற்றிடங்களை நிரப்புமாறு அரச சேவைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டுள்ளமை மற்றும் ஏனைய திணைக்களம் சார் பதவிகளுக்காக சேவைக்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை. | மருத்துவ வழங்கல் நடைமுறையை உரிய முறையிலும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு நிலவும் தடைகளை அகற்ற இயலுமான முறையில் முறையாக வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிக ஊழியர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |